# மறைவலார் குறைவிலார்

சோகத்தூர் ராமாநுஜாசார்யர், பெங்களூர்

आविष्णोरभिवन्द्यादावाचार्याणां परम्पराम् । वेदाचार्यान् स्वतातांश्च पराङ्कुशसदाह्वयान् ॥

वात्स्यरामानुजार्योऽत्र वेदविन्महिमार्णवे । कणान्द्वित्रान्व्यनक्त्यद्य हरिदाससतां मुदे ॥

श्रीवासराघवार्याणां शतमानमहे सताम् । प्रार्थितस्तत्पुत्रपौत्रैः वाचिकीं तनुते मुदा ॥

सेवां चारित्रधन्यानां वेदसेवारतात्मनाम् । तदीयोत्सवकाले हि स्मरणं साम्प्रतन्त्विति ॥

'पितृदेवमनुष्याणां वेदश्चक्षुः सनातनम्' என்றும், 'वेदोऽखिलो धर्ममूलम्' என்றும் சொல்லுகிற படியே எல்லோருக்கும் நல்வழி காட்டும் நித்யமான உட்கண்ணாய், அனைத்து தர்மத்தையும் அறியக் காரணமாய் உள்ள வேதத்தை, அந்தணர்கள் அனைவரும் தம் கடமையென முறை வழுவாது கற்றல் இன்றியமையாதது. இதன்படி நடக்கும் அந்தணர்கள் உலகு முழுவதும் நன்கு வாழ வழி வகுக்கின்றனர். எம்பெருமானுக்கும் 'அறுதொழில் அந்தணர் வணங்கும் தன்மையை' (3774), 'மூவாயிரம் நான்மறையாளர், நாளும் முறையால் வணங்க அணங்காய சோதி தேவாதி தேவன்' (1165) என்றெல்லாம் புகழ் வேதியரின் வணக்கத்தால் ஏற்படுகிறது.

இப்படிப்பட்ட 'வேதம் வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணி' (2476) யப் பணிக்கிறார் குருகூர் மாறன் சடகோபனாம் ஆழ்வார். இவ்வேதியரின் பெருமைகளைத் தமிழ்மறையின் வாயிலாகச் சற்று அனுபவிப்போம். வடமறையினும் தென்மறையாகிய நாலாயிர திவ்யப்ரபந்தங்களுக்கு ஏற்றம், திருமாமகள் கேள்வனான எம்பெருமானை 108 பாடல் பெற்ற திருத்தலங்களில் - திவ்யதேஶங்களில் - 'பின்னானார் வணங்கும் சோதி' (2061) யாய், அர்ச்சை உருவத்தில் வினையரும் கண்ணாரக் கண்டு களித்துப் பணிவிடை செய்திட எளியனாம் தன்மையுடன் அருள் கூர்தலால் பிறவிப்பயனும் பிறவாமை அடைதலுமே.

இவ்விடத்தில் மயர்வற மதிநலமருளப்பெற்ற ஆழ்வார்கள் பாடிய வைணவத் திருத்தலங்கள் 108-ல் 86 திவ்யதேஶங்களைப் பாடிய கலியனும் (திருமங்கை ஆழ்வார்), 35 திவ்யதேஶங்களைப் பாடிய காரிமாறனும் (நம்மாழ்வார்), பலவிடங்களில் திவ்யதேஶத்தின் முக்கியக் குறியாக வேதியர் அங்கு வாழ்தலும், அவர்களால் தூயமறைகளின் வாயிலாக எம்பெருமான் தொழப்படுவதுமேயெனப் பகர்கின்றனர். இதை அவர்களின் சொற்களாலேயே கண்டு மகிழ்வோம்.

**மறையவர்** – 'மறைப் பெருந்தீ வளர்த்திருப்பார் வருவிருந்தை அளித்திருப்பார் சிறப்புடைய மறையவர் வாழ் திருவரங்கம்' (403), 'செஞ்சொல் மறையவர் சேர், புதுவை' (53), 'எண்ணில்மிகு பெருஞ் செல்வத்து எழில்விளங்கு மறையும் ஏழிசையும் கேள்விகளும் இயன்ற பெரும் குணத்தோர் மண்ணில் மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர் வைகுந்த விண்ணகரம்' (1229), 'நாமனத்தால் மந்திரங்கள் நால்வேதம், ஐந்து வேள்வியோடு ஆறங்கம் நவின்று கலை பயின்று அங்கு ஆமனத்து மறையவர்கள் பயிலுமணி நாங்கூர் அரிமேய விண்ணகரம்' (1244), 'மாவளம் பெருகி மன்னு மறையவர் வாழும் நாங்கைக் காவளம்பாடி' (1298, 1307), 'முற்றும் மறையவர்க்குக் காட்டிய மாயவனையல்லால் இறையேனும் ஏத்தாது என் நா' (3277), 'வாழ்வற்றது தொல்லை வாதியர்க்கு என்றும் மறையவர் தம் தாழ்வற்றது தவம் தாரணி பெற்றது தத்துவ நூல் கூழற்றது குற்றமெல்லாம் பதித்த குணத்தினர்க்கு அந் நாழற்றது நம் இராமானுசன் தந்த ஞானத்திலே' (3957).

**மறை வல்லார்** - 'நாத்தொழில் மறை வல்லார்கள் நயந்து அறம் பயந்த வண்கைத் தீத்தொழில் பயிலும்

நாங்கூர்த் திருமணிக்கூடம்' (1290), 'நலங்கொள் நான்மறை வல்லார்கள், ஓத்தொலி ஏத்தக் கேட்டு மலங்குபாய் வயல் திருப்பேர்' (1433), 'மறைவலார் குறைவிலாருறையுமூர் வல்லவாழ்' (1817), 'தெருள் கொள் நான்மறை வல்லவர் பலர்வாழ் சிரீவரமங்கலநகர்' (2592).

**வேதியர்** - 'வேதியர் வரம் கொளக் குடந்தையுள், கிடந்த மாலுமல்லையே?' (809), 'மிக்க வேதியர், வேதத்தினுட் பொருள் நிற்கப் பாடி, என் நெஞ்சுள் நிறுத்தினான் தக்க சீர்ச், சடகோபன்' (945), 'மன்னு புகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர் வைகுந்த விண்ணகரம்' (1232), 'பெரும்புகழ் வேதியர் வாழ்தரும் இடங்கள் மலர்கள் மிகு கைதைகள் செங்கழுநீர் தாமரைகள் தடங்கள் தொறும் இடங்கள் தொறும் திகழ அருவிடங்கள் பொழில் தழுவி எழில் திகழும் நாங்கூர் அரிமேய விண்ணகரம்' (1238), நந்தாத/ நன்றாய பெரும் புகழ், நாடார்/நாவார் புகழ் நல்லார் பலர்/நாலாகிய/ நல்லன்புடை வேதியர் நாங்கூர் .... திருவெள்ளக்குளம்' (1309 - 1315), 'நால்வகை வேதம் ஐந்து வேள்வி, ஆறங்கம் வல்லார் மேலை வானவரில் மிக்க, வேதியர் ஆதிகாலம்' (1436), 'இவர் வாயில் நல்வேதமோதும் வேதியர், வானவராவர் தோழி!' (1758), 'சோதியாகி, எல்லாவுலகும் தொழும் ஆதிமூர்த்தியென்றால், அளவாகுமோ? வேதியர் முழுவேதத்து, அமுதத்தைத் தீதில் சீர்த், திருவேங்கடத்தானையே'(2330),'அமர்ந்த தண்பழனத் திருச்செங்குன்றூரில் திருச்சிற்றாற்றங்கரையானை அமர்ந்தசீர் மூவாயிரவர் வேதியர்கள் தம்பதி அவனி தேவர் வாழ்வு' (2896), 'நற்புகழ் வேதியர், நான்மறை நின்றதிர் கற்பகச் சோலைத், திருக்கடித்தானம்' (2918), 'நாளும் புகை விளக்கும் பூம்புனலுமேந்தித் திசைதிசையின் வேதியர்கள் சென்றிறைஞ்சும் வேங்கடமே' (3230), 'நல் வேதியர்கள் தொழும் திருப்பாதனிராமானுசனைத் தொழும் பெரியோர் எழுந்திரைத்தாடும் இடம் அடியேனுக்கு இருப்பிடமே' (3997).

**அந்தணர்** - 'அருமாமறை அந்தணர் சிந்தை புகச் செவ்வாய்க் கிளி நான்மறை பாடு, தில்லைத் திருச்சித்ரகூடம்' (1163), 'நல்ல வெந்தழல் மூன்று நால் வேதம் ஐவேள்வியோடு ஆறங்கம் வல்ல அந்தணர் மல்கிய நாங்கூர் வண் புருடோத்தமமே' (1259), 'மறையால் முத்தீயவை வளர்க்கும் மன்னு புகழால் வண்மையால் பொறையால் மிக்க அந்தணர் வாழ் புள்ளம்பூதங்குடி' (1355), 'உருக்குறு நறுநெய் கொண்டு, ஆரழலில் இருக்குறும் அந்தணர் சந்தியின் வாய் பெருக்கமொடு அமரர்களமர நல்கும் இருக்கினில், இன்னிசை யானவனே! ஆண்டாய்! உனைக் காண்பதோரருள் எனக்கருளுதியேல் வேண்டேன் மனைவாழ்க்கையை விண்ணகர் மேயவனே!' (1454), 'நலங்கொள் வாய்மை, அந்தணர் வாழும் நறையூரே' (1488), 'வேதம் நான்கு ஐந்து வேள்வி அங்கமாறு இசையேழ் நடையா வல்ல அந்தணர் வாழ் நறையூர்' (1514), 'செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர் திசைமுகனையனையவர்கள் செம்மை மிக்க அந்தணர் தம் ஆகுதியின் புகையார் செல்வத்து அணியழுந்தூர்' (1624), 'அந்தணர் சிந்தையுள் ஈசனை இலங்கும் சுடர்ச் சோதியை எந்தையை எனக்கு எய்ப்பினில் வைப்பினைக் காசினை மணியைச் சென்று நாடிக் கண்ணமங்கையுள் கண்டு கொண்டேனே' (1641), 'வாயெடுத்த மந்திரத்தால் அந்தணர் தம் செய் தொழில்கள் தீயெடுத்து மறை வளர்க்கும் திருக்கண்ணபுரம்' (1672), 'அந்தரத்தில் தேவர்க்கும் அறியலாகா அந்தணனை, அந்தணர் மாட்டு அந்தி வைத்த மந்திரத்தை மந்திரத்தால் மறவாது என்றும் வாழுதியேல், வாழலாம் மடநெஞ்சமே!' (2055), 'அந்தணர் தம் சிந்தையானை விளக்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில் வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு' (2065), 'நன்னலத் தோழிமீர்காள்! நல்ல அந்தணர் வேள்விப் புகை மைந்நலங்கொண்டு, உயர் விண் மறைக்கும் தண் திருவல்லவாழ்' (2616).

'வாய் நல்லார், நல்ல மறையோதி மந்திரத்தால் பாசிலை நாணல் படுத்துப் பரிதி வைத்துக் காய் சின மாகளிறன்னான், என் கைப்பற்றித் தீ வலம் செய்யக், கனாக் கண்டேன் தோழீ! நான்.' (562) என்று **ஆண்டாள்** தன்னை அரங்கன், 'அந்தணர் மந்திரமொழியுடன்' (3774) வைதிக முறையில் மணந்ததாகக் கூறுகிறாள்.

**ஸ்வாமி ஸ்ரீ தேஶிகன்** - 'துலையொன்றிலையென நின்ற துழாய் முடியானுடம்பாய் விலையின்றி நாமடியோமென்று வேதியர் மெய்ப்பொருளே.' (ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம் 3.16), 'முன்பெற்ற ஞானமும் மோகந்துறக்கிலும் மூன்றுரையில் தன்பற்ற தன்மையுந் தாழ்ந்தவர்க்கீயுந் தனித்தகவும் மன்பற்றி நின்றவகையுரைக்கின்ற மறையவர்' (32.12), 'தொண்டை மண்டல வேதியர் வாழவே தூய தென்மறை வல்லவர் வாழவே' (6.1.27), 'வினைத்திரள் மாற்றிய வேதியர் தந்த நல்வாசகத்தால் அனைத்துமறிந்தபின் ஆறும் பயனுமென வடைந்தோம்' (11.30, 38).

குறிப்பு - தலைப்பில் எடுத்த பாட்டின் பொருள் 'வேதமறிந்த பகவர் எவ்விதக் குறையுமற்றவர்' என்பதாம். இங்குக் காட்டிய ஆழ்வார் பாட்டுகளை அடுத்த எண்கள் நாலாயிர திவ்ய ப்ரபந்தப் பாட்டுக்களின் தொடர் எண்ணிக்கை 1-லிருந்து 4000 வரை.

இவ்வாறு பற்பல திவ்யதேஶங்களைக் குறிப்பிடுங்கால் மறையவர், வேதியர், அந்தணர் இருப்பதால் மேன்மை வாய்ந்ததாகச் சொல்லப்பட்டுள்ளதால், அவ்வாறு வேதத்தை ஓதி, அறிந்து எம்பெருமானுக்குக் கைங்கர்யம் செய்து வந்த வேளியநல்லூர் ஸ்ரீநிவாஸராகவாசார்ய கனபாடி ஸ்வாமியின் மேன்மையை நன்கு உணரலாம். இந்த ஸ்வாமி அடியேனுடைய தமையனின் மாமனார், மற்றும் சிறுவயதில் அடியேன் ஸ்ரீமதஹோபிலமடத்தில் வேதபாராயணகாலத்தில் இந்த ஸ்வாமியை ஸேவித்திருக்கிறேன். அவருடைய க்ருபைக்கு பாத்ரமாயுள்ளேன்.

அன்னாரின் நூற்றாண்டு விழாவில் வெளியிடப்படும் மலருக்கு ஒரு வ்யாஸம் எழுதித்தரும்படி அவர் குமாரரின் வேண்டுகோளுக்கிணங்க இச் சிறுகட்டுரையை ஸமர்ப்பித்து தந்யனாகிறேன்.

ப்ரீயதாம் பகவான் வாஸுதேவ:

ஶுபமஸ்து.